Dinamalar, Monday, March 1, 2010

# ‘அறிவியல் பட்டம் பெற்றவர்கள் அதிகம் தேவை’: விருது வழங்கும் விழாவில் தகவல்

**சென்னை**

‘இந்தியன் சயின்ஸ் மானிட்டர்’ அமைப்பு சார்பில் ஏழாம் ஆண்டு ஜெகதீஷ் சந்திரபோஸ் நினைவு விருது வழங்கும் விழா நேற்று சென்னையில் நடந்தது.

விழாவில், பெங்களூரு இஸ்ரோ ‘விஷன் ஆபரேஷன்’ பிரிவு பொது மேலாளர் பிச்சைமணி, சென்னை, சி.எஸ்.ஐ., எவர்ட் மெட்ரிக் பள்ளியின் முதல்வர் ஷீலா லாரன்ஸ், ‘இன்பாக்ஸ் 1305’ பத்திரிகை ஆசிரியர் கிருத்திகா உதயநிதி, கொடைக்கானல் வானிலை ஆய்வுக்கூடத்தின் விஞ்ஞானி சுந்தரராமன்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழக ஆற்றல் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங் கள் துறையின் தலைவர் சாமுவேல் பால்ராஜ், மத்திய சமூக நீதித்துறை அதிகாரி சசிகுமார், பாரதி பெண்கள் கல்லூரி உயிர் வேதியியல் பேராசிரியர் பத்மினி, மரபுசாரா எரிசக்தி துறை உறுப்பினர் சேஷாத்ரி ஐயர், திண்டுக் கல் கிராமப்புற கல்வி திட் டத்தை நடத்தும் ராஜசிம் மன் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட் டன.

விருதுகளை, சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி மோகன் வழங்கினார். அவர் பேசும் போது,

‘‘அறிவியல் துறையில் இருப்பவர்கள் மக்களுக்கு பெருமளவில் உதவி வருகின்றனர். விருது பெற்ற இஸ்ரோ அதிகாரி, இது வரையில் அறிந்திராத விஷயங்களை கூறினார். அவர், அடுத்த அப்துல் கலாமாக மக்கள் மத்தியில் அறியப்படுவார்.

அறிவியல் துறை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் விஞ்ஞானிகள், மக்களின் முன்னேற்றத்திற்காக சிறந்த விஷயங்களை அளிக்க வேண்டும்,’’ என்றார்.

விழாவின் சிறப்பு விருந்தினரான, தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் உறுப்பினர் செயலர் வின்சென்ட் பேசும் போது,

‘‘அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தான் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு பின்புலமாக உள்ளது. எனவே, மத்திய, மாநில அரசுகள் இத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கி வருகின்றன. வரும் 11வது ஐந்தாண்டு திட்டத்தில், அடிப்படை அறிவியல் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில், இளம் அறிவியலாளர்களை ஊக்குவிக்கும் வகையில், பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2வில் சாதனை புரிந்து அறிவியல் பிரிவு பட்டப்படிப்பு படிக்கும் போது ஆண்டு தோறும் 80 ஆயிரம் ரூபாயும், பட்ட மேற்படிப்பிற்கு ஆண்டு தோறும் 80 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது.

வரும் காலத்தில் அறிவியல் பட்டம் பெற்றவர்கள் அதிகளவில் தேவைப்படுகின்றனர். அறிவியல், தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குபவர்கள் நிச்சயம் அதற்குரிய பலனை பெறுவர்,’’ என்றார்.

முன்னதாக, இந்தியன் சயின்ஸ் மானிட்டர் அமைப்பின் நிறுவனர் டி.கே.வி. ராஜன் பேசும் போது,

‘‘நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன், நெல்லை தாமிரபரணி ஆற்றுக்கரையில் மக்கள் வளத்துடன் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. 100 ஆண்டுகளுக்கு முன், இங்கு வந்த வெளி நாட்டவரான அலெக்சாண்டரி என்பவர் இதற்கான ஆதாரங்கள் பலவற்றை லண்டன் நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் வைத்துள்ளார்.

ஆதிச்சநல்லூர் பகுதியில் மீண்டும் அகழ்வாய்வு நடத்த அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் வலியுறுத்தியுள்ளோம்.

இந்தியன் சயின்ஸ் மானிட்டர் சார்பில், இது வரையில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 37 பேர் விருது பெற்றுள்ளனர்,’’ என்றார்.




சென்னையில், ‘இந்தியன் சயின்ஸ் மானிட்டர்’ அமைப்பின் சார்பில் நேற்று நடந்த 7ம் ஆண்டு ஜெ.சி.போஸ் நினைவு விருது வழங்கும் விழாவில், சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி மோகன், விருதுகளை வழங்கினார். விருதுகளை பெற்றுக்கொண்டவர்களுடன் அமைப்பின் நிறுவனர் ராஜன், தமிழக அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் உறுப்பினர் செயலர் வின்சென்ட்.

## பெண் குடியர்கள் அதிகம்

இந்தியன் சயின்ஸ் மானிட்டர் சார்பில் விருது பெற்ற சென்னை, பாரதி பெண்கள் கல்லூரி பேராசிரியர் பத்மினி பேசும்போது,

‘‘தமிழகத்தில், சென்னை உள்ளிட்ட பகுதிகளில் 30லிருந்து 40 சதவீதம் பெண்கள் மது அருந்துகின்றனர் என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

குறிப்பாக கிராமப்புற பெண்கள் அதிகளவில் மது அருந்துகின்றனர். பெண்கள் உடலில் இயல்பாகவே நீர்ச்சத்து அதிகம். மது அருந்துவதால் பெண்களுக்கு அதிகநேரத்திற்கு ஆல்கஹாலின் சக்தி இருக்கும். இது விரைவில் கல்லீரலை பாதிக்கும். பெண்கள் மது அருந்துவது, குழந்தைகளையும், தொடர் சந்ததிகளையும் பாதிக்கிறது.

கர்ப்பிணிப் பெண் குடித்தால் குழந்தையை பாதிப்பதுடன், பல்வேறு நோய்கள் தாக்குவதற்கும் இடமளிக்கிறது. பல பெண்கள் தற்போது பேஷனுக்காக குடிக்கின்றனர். மது அருந்துவதால் உண்டாகும் பாதிப்பு ஆண்களை விட பெண்களுக்கு 45 சதவீதம் அதிகம்,’’ என்றார்.